**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029156

1. District / மாவட்டம்: கிருஷ்ணகிரி   PS / காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு   Year / ஆண்டு:   FIR No. / மு.த.அ. எண்: 13/AC/17   Date / நாள்: 15.12.17

2. (i) Act சட்டம்: u/s 102 (IPC, 13(2) r/w   Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: 13(1)(a)&(d) of PC Act   Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: 13(1)(a)&(d) of PC Act r/w 109 IPC.   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள்:   Date from / நாள் முதல்: 14.12.17   Date to / நாள் வரை: 14.12.17
   Time Period / நேர அளவு:   Time from / நேரம் முதல்: 08.00 Hrs   Time to / நேரம் வரை: 20.00 Hrs
   (b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 15.12.17   Time / நேரம்: 11.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 15.12.17   Time / நேரம்: 11.00 மணி

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   Collection of Source

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number / முறைக் காவல் எண்:
   (b) Address / முகவரி: சுமார் 50 கி.மீ வடக்கு போக்குவரத்து துறை உள்வழி சோதனைசாவடி ஜிப்காட், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: G.V. கிருஷ்ணராஜன்   (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர்: P. வேட்ராயன்
   (c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு: 45 y   (d) Nationality / நாட்டினம்:   (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்:
   Date of Issue / வழங்கப்பட்ட நாள்:   Place of Issue / வழங்கப்பட்ட இடம்:
   (f) Occupation / தொழில்: காவல் துணை கண்காணிப்பாளர்   (g) Address / முகவரி: ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாமக்கல், பொறுப்பு கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திருமதி E. கலைவாணி மோட்டார் வாகன ஆய்வாளர் (NT)
   2) திருமதி A. அங்கயற்கண்ணி, உதவியாளர், போக்குவரத்து துறை சோதனைசாவடி ஓசூர்.
   3) திரு. சிவக்குமார் த/பெ நாகேந்திரன், தருமபுரி (முன் நபர்).

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
திடீர் சோதனையின் போது கணக்கில் வராத பணம்
ரூ. 2,62,480/- கைப்பற்றப்பட்டது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் S. மோகன்......... பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / ~~மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.~~

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 15/12/17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம்
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 15/12/17

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் G.V. கிருஷ்ணராஜன்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் நிலைய பொறுப்பாளர்
ஊ.த.க. பிரிவு நாமக்கல்
பொறுப்பு- கிருஷ்ணகிரி.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15.12.2017 / 12 மணி

<u>கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 13/AC/2017 வழக்கின் முதல் தகவலறிக்கையின் வரிசை எண் 12-ன் தொடர்ச்சி.</u>

<u>சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர்-சிப்காட்டில் செயல்பட்டுவரும் போக்குவரத்து துறைக்கு சொந்தமான உள்வழி சோதனை சாவடியில் பணியாற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள், உதவியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் பொது ஊழியர் என்ற முறையில் அவரவருடைய பணியை செய்வதற்காகவும், விதி மீறி இயக்கப்படும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காகவும், தற்காலிக அனுமதி வழங்குவதற்காகவும் வாகனங்களின் டிரிப்சீட்டுகளில் முத்திரையிடவும் சோதனைசாவடிக்குவரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடம் லஞ்சமாக பணம் பெற்றுக்கொண்டு டிரிப்சீட்டுகளில் சீல்வைப்பதாகவும் கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் 14.12.2017ம் தேதி இரவு 08.00 மணி முதல் இரவு 11.00 மணிவரை அரசு சாட்சிகள் திரு.கிருஷ்ணமூர்த்தி, துணை வட்டாட்சியர் (வரவேற்பு), மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் திரு.ராஜாகண்ணு, வருவாய் ஆய்வாளர், பாலேபள்ளி உள்வட்டம் ஆகியோர் முன்னிலையில் திடீர் தணிக்கை மேற்கொண்டேன். திடீர் தணிக்கையின்போது அலுவலக உதவியாளர் திரு.சத்தேஷ்குமார் சாலையின் ஓரமாக நின்றுகொண்டு வெளிமாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் வரும் கனரக வாகனங்களை நிறுத்தி அதன் ஓட்டுனர்களை சோதனை சாவடிக்குள் அனுப்பிக்கொண்டிருந்தார். சோதனைச்சாவடியின் பொறுப்பிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.திருமதி.E.கலைவாணி, தனது இருக்கையில் அமர்ந்திருந்தார், திருமதி.A.அங்கையற்கன்னி, உதவியாளர் கணினி முன் அமர்ந்து வாகனத்திற்கு வரி விதிப்பு இரசீது தயார் செய்துக்கொண்டிருந்தார். அவருக்கு எதிர்புறம் தனிநபர் (Private Individual) திரு.சுனில்குமார் த/பெ நாகேந்திரன் அவர்கள் மேசையின் அருகே நின்றுக்கொண்டு அலுவலக முத்திரைபெற வரும் வாகன ஓட்டுனர்கள் கொண்டுவரும் டிரிப்சீட்டில் முத்திரை பதித்தும் அவர்கள் கொடுக்கும் பணத்தை வாங்கி மேசைமீதிருந்த அட்டை பெட்டியில் போட்டுக்கொண்டிருந்தார். அரசு சாட்சிகள் முன்னிலையில் திரு.சுனில்குமார் அவர்கள் வாகன ஓட்டுனர்களிடம் பணத்தை வாங்கி

மேசைமீதிருந்த அட்டை பெட்டியில் போட்டுக்கொண்டிருந்த அந்த பெட்டியை சோதனை செய்தபோது அதில் ரூ.10,760/- இருந்தது. மேற்படி பணம் பற்றி கேட்க, சோதனை சாவடியில் பணிபுரிந்த அலுவலர்களும் மற்றும் திரு.சுனில்குமார் அவர்களும் சரியான முகாந்திரம் சொல்லாததாலும் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் மேல்விசாரனைக்காக மேற்படி பணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.கலைவாணி அவர்களின் மேசை டிராயரில் ரூ.27,600/- இருந்தது. மேலும் அவரின் டேபிலுக்கு அடியில் ரூ.14,700/- இருந்தது. மேற்படி பணத்தை குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் துணை காவல் கண்காணிப்பாளர் கேட்க, அவர் சரியான முகாந்திரம் சொல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் மேற்படி பணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பிறகு உதவியிளார் திருமதி.அங்கயற்கன்னி அவர்களின் டேபிள் டிராயரை திறந்து பாரக்க அதில் ரூ.25,620/- இருந்தது. அதேபோல் அவருடைய இருக்கைக்கு அருகில் வலது பக்கம் இருந்த பிளாஸ்டிக் குப்பை தொட்டியில் சோதனை செய்து பார்க்க அதில் அதில் அதில் ரூ.17,100/- இருந்தது. மேற்படி பணம் ரூ.25,620/- மற்றும் ரூ.17,100/- ஆகியவை குறித்து உதவியாளர் திருமதி.அங்கையர்கன்னி அவர்களிடம் துணை காவல் கண்காணிப்பாளர் கேட்க, அவர் சரியான முகாந்திரம் சொல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் மேற்படி பணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்பு சோதனை சாவடி அலுவலக அறைகளை சோதனை செய்தபோது, மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் இருக்கைக்கு பின்புறம் வடக்கிலுள்ள கணினி அறையில் கணினி பிரின்டருக்கு அடியில் ரூ.11,600/- இருந்தது. மேற்படி பணத்தை குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் கேட்க அவர் சரியான முகாந்திரம் சொல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும், மேற்படி பணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்பு அலுவலகத்தின் கிழக்குப்பக்கத்தில் உள்ள பதிவேடுகள் அறையை சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்ய, அங்கு மேற்கு முகம் பார்த்த இரும்பு பீரோவிற்கு அருகிலிருந்த இரும்பு ரேக்கில் பதிவேடுகளுக்கு இடையில் 4 காக்கிநிற கவர்கள் சொருகி வைக்கப்பட்டிருந்தது. அந்த காக்கிநிற கவர்களை எடுத்து பார்க்க அதில் ஒவ்வொரு கவர்களிலும் தலா ரூ.30,000/- வீதம் மொத்தம் ரூ.1,20,000/- இருந்தது. மேற்படி காக்கி

கவர்கள் மற்றும் அதிலிருந்த பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் உதவியாளர் ஆகியோர்களிடம் துணை காவல் கண்காணிப்பாளர் கேட்க, அவர்கள் சரியான முகாந்திரம் சொல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் மேற்படி பணம் மற்றும் நான்கு காக்கி கவர்கள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பதிவேடுகள் அறையில் மேற்கு முகம் பார்த்த இரும்பு பீரோவிற்கு கீழ் சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது பீரோவிற்கு அடியில் ரூ.35,100/- என்ற அளவில் இருந்தது. அந்த பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர், உதவியாளர் ஆகியோரிடம் துணை காவல் கண்காணிப்பாளர் கேட்க, அவர்கள் இருவரும் சரியான மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மொத்த பணம் ரூ.2,62,480/- பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர திருமதி.E.கலைவாணி, உதவியாளர் A.அங்கையற்கன்னி, அலுவலக உதவியாளர் U.சத்தேஷ்குமார் மற்றும் தனிநபர் சுனில் குமார் அவர்களிடம் கேட்க, உள்வழி சோதனை சாவடியை கடந்து செல்லும் கனரக வாகன ஓட்டுனர்கள் மற்றும் கிளினர்கள் டிரிப் சீட்டில் முத்திரைபெற வரும்போது கொடுக்கப்பட்ட பணம் என்று கூறினார்கள். அதற்கு எந்தவித இரசீதுகளும் அவர்களுக்கு வழங்கவில்லை என்றும் தெரிவித்தார்கள். ஆகவே திருமதி.கலைவாணி, மோட்டார் வாக ஆய்வாளர், திருமதி.அங்கயற்கன்னி, உதவியாளர் ஆகியோர் பொது ஊழியர் என்ற மறையில் தங்களது அலுவல் பதவியை துஷ்பிரயோகம் செய்த தனது கடமையை செய்வதற்காக அவர்களுக்காக சட்ட விரோதமான வழிமூலம் லஞ்சமாக பணத்தை பெற்று குற்றமுறு கெட்ட நடத்தையை செயல்புரிவதை வழக்கமாக கொண்டிருந்துள்ளார்கள் என்பதற்கு போதுமான முகாந்திரம் உள்ளது. மேலும் தனிநபர் திரு.சுனில்குமார், பொது ஊழியர்களான திருமதி.கலைவாணி மற்றும் திருமதி.அங்கயற்கன்னி ஆகியோர்களை குற்றமுறு கெட்ட நடத்தை செயல்புரிய உடந்தையாக செயல்பட்டு சோதனைசாவடிக்கு வரும் கனரக வாகன ஓட்டுநர்களிடம் டிரிப்சீட்டை பெற்று அதில் அரசு அலவலக முத்திரை பதித்து அதற்காக ஓட்டுநர்கள் கொடுத்த பணம் ரூ.10,760/-ஐ பின்னிட்டு அவர்களிடம் கொடுப்பதற்காக அங்கு வைக்கப்பட்டிருந்த அட்டைப்பெட்டியில் சேகரித்து வந்துள்ளார். எனவே 15.12.2017ம் தேதி காலை 11.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 13/2017/AC சட்டப்பிரிவுகள் 102 CrPC, 13(2) r/w

13(1)(a) &(d) of the Prevention of Corruption Act 1988 மற்றும் 13(2) r/w 13(1)(a)&(d) of the Prevention of Corruption Act 1988 r/w 109 IPC படி எதிரிகள் மோட்டார் வாகன ஆய்வாளர்(தொழில்நுட்பம் அல்லாதது) திருமதி.கலைவாணி, உதவியாளர் திருமதி.அங்கயற்கன்னி மற்றும் தனிநபர் திரு.சுனில்குமார் ஆகியோர்மீது முதல் தகவலறிக்கை பதிவு செய்து, அதன் அசலை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

15/12/17

கெ.வே.கிருஷ்ணா ராஜன்,
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல், பொறுப்பு கிருஷ்ணகிரி.